அந்தப் பணி முடிந்தபிறகு மேற்கொண்டு இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

தொழிற்பயிற்சி நிலையம்

****36670 திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆழியாறு பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான நிலை தற்போது எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதி மலைப் பகுதி. தேயிலை, காபி தோட்டங்கள் நிறைந்த நகராட்சிப் பகுதியாகும். கீழ்ப் பகுதியில் 28 பஞ்சாயத்துகள் உள்ளன. இவற்றில் தென்னை விவசாயம், நெல், கரும்பு சாகுபடி செய்கிறார்கள்.*

[2015 செப்டம்பர் 3

குறுக்கு, முடுக்கு நிறைந்த கிராமப் பகுதிகளாகும். மலைவாழ் மக்கள் கணிசமான எண்ணிக்கையில் வாழ்ந்து வருகிறார்கள். வால்பாறை தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களில் 98 சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள். இது தொழிற் துறையில் பின்தங்கிய பகுதியாகும். 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து, கல்லூரி படிப்பு படிக்க வாய்ப்பு இல்லாதவர்கள். தொழிற் கல்வி படிக்க கோவைக்குச் செல்ல வேண்டும் அல்லது வேறு பகுதிகளுக்குச் செல்ல வேண்டும். கல்லூரிப் படிப்புக்கும், மேற்படிப்புக்கும் சென்று படிக்க முடியாத சூழ்நிலை அங்கிருக்கின்ற காரணத்தினால் எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு படித்தவர்கள் ஐ.டி.ஐ. படிப்பு படிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று கருதுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழியாறு பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், 3 இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 1,939 இருக்கைகளோடு சிறப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே, 16 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மட்டும் 2,452 இருக்கைகளோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, வால்பாறை தொகுதியைப் பொறுத்தமட்டில், இரண்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

அந்த வகையிலேதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதற்கிணங்க பழங்குடியினரும், ஆதி திராவிட மாணவர்களும் பயன்பெறத்தக்க அளவிற்கு கோவை மாவட்டம், ஆனைக்கட்டியில் 656 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தை, அவர்

2015 செப்டம்பர் 3]

தொகுதியைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைக்கட்டியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்றும், அங்கே மாணவர்கள் சேர்ந்து படிக்கலாம் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வால்பாறை பகுதிக்கும், ஆனைக்கட்டிக்கும் இருக்கின்ற இடைவெளி கிட்டத்தட்ட 60,70 கிலோ மீட்டர் தூரமாகும். ஏற்கெனவே வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டிருக்கின்ற ஆழியாறு பகுதியில், காவல் நிலையத்திற்கு அருகில் மூன்றரை ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, அங்கே ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை அமைக்க கடந்த ஆண்டு அரசு அதிகாரிகள் வந்து பார்வையிட்டுச் சென்றார்கள். எனவே, நான் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று அங்கே ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 15 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூபாய் 77.77 கோடியில் தேவையான இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, அவ்வப்போது தேவைக்கேற்ப தொழிற்பயிற்சி நிலையங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வருடந்தோறும் அறிவித்துக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில், உங்களுடைய பகுதிக்கும் தேவை என்று ஆய்வில் தெரிய வந்தால், வருங்காலத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதிக்கு*

அந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, இன்னொரு செய்தி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்வோடு இருக்க வேண்டுமென்று சொன்னால், அந்தப் பகுதிகளில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன, அவற்றிலே நவீனமான புதிய தொழிற்பயிற்சிப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

214—

அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர்

***57391—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, மேலகுப்பம் ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி, ஆலங்காயம் வட்டாரம், மேலகுப்பம் ஊராட்சியிலுள்ள மேலகுப்பம்-2 அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.